இன்று உன் பணி ஓய்வு மடலை கண்டேன்

என்ன பதில் மடல் எழுதுவது என புரியவில்லை

வாழ்த்தி நான்கு வரி எழுதலாம்மென்றால்

நம் பழைய நினைவுகள் இடையில் வந்து வந்து

நிகழ்வில் எழுத விடவில்லை

புரியவில்லை என்ன எழுதுவது என்று

உனைப் போல் கவிஞ்சனாய் இருந்தித்திருந்தால்

நான்கு வரி நயமாய் எழுதி இருப்பேன்.

சாதாரண நடையில் எழுதலாம்மென்றால்

விரல்களில் சற்று நடுக்கம் கண்டேன்

காரணம் பயமில்லை மனம் பழைய நினைவுகளில்

மூழ்கிவிட்டது நிகழ்வை  நினைக்க மறுத்துவிட்டது

நீ நான் அவன்

இயல்பாய் இணைந்து விட்ட நட்பு

இல்லை இயற்கையாய் இணைந்து விட்ட நட்பு

நீயும் நானும் தினம் தினம் சந்திக்க வில்லை

தினம் தினம்  பேசவில்லை ஆனால்

தினம் தினம் உனை நினைக்காமல் எழ இயலவில்லை

நித்திரையில் சில சமயம் முகம் காட்டி மறைவாய்

விடியும் போது தான் அது கனவு என புரியும்

உன் திருமண நேரத்தில் தான் நமக்கு தெரிந்தது

நம் நட்பு சட்டென பிறந்த நட்பல்ல தலைமுறை சார்ந்தது என்று ஆம்

உன் தந்தையும் என்தந்தையும் இளவயது நண்பர்களென்று தெரிந்தபோது

இன்று என்னால் என் நினைவுகளை நிறுத்த முடியவில்லை

1984 இல் தொடங்கியது நமது நட்பு

அன்று தொடங்கிய நட்பு

மாலை நேரத்தில் வெங்காய தோசையும்

மணக்க மணக்க காப்பி சாப்பிட்டது உன்

தந்தைக்கு வெற்றிலையும் சீவலும் வாங்கியது

கடற்கரை மின் வண்டி நிலையத்தில் நின்று

மணிக்கணக்காய் பேசியது

ஜெய்யுடன் சேர்த்து சாலை சாலையை சுற்றியது

கடற்கரை மணலில் நடை பயில்வதுபோல் மெதுவாய் நடந்தது

திருவான்மியூர் முதல் வி ஜி பி வரை கொளுத்தும் வெயிலில் நடந்தது

எதை சொல்வது எதை மறப்பது புரிவில்லை அசோகன்.

என் நிதி நிலை அறிந்து செய்த உதவியை மறப்பதா

கீவளூரில் அந்த கொட்டும் மழையில் உண்ட உணவை மறப்பதா

உன் தாயார் கொடுத்தனுப்பும் புளியோதரை கலவையை மறப்பதா

இதை முடிக்க மனமில்லை ஆனால் எதோ ஒரு இடத்தில

கமா போட வேண்டுமே அதனால் போடுகிறேன்.

இன்று அரசு பணியிலிருந்து தான் ஓயவு பெறுகிறாய்

காரணம் இதற்க்கு ஒரு கால அளவு குறிக்கப்பட்டுள்ளது

உன் சேவையும் தேவையும் பலருக்கும் இருக்கிறது

இதற்க்கு கால அளவேதும் இல்லை

நீண்ட நீண்ட நெடிய காலம்

உன் தேவை இந்த உலகிற்கு உள்ளது

நல்ல உடல் நலத்துடன்

மன நிறைவுடன் உன் சுற்றம் வாழ வேண்டும்.

இதற்காக நான் தனியாக இறைவனிடம் வேண்ட போவதில்லை காரணம்

என் ஒவொரு வேண்டுதலிலும் நீ இருப்பாய் .

அசோகன் இதில் எழுத்து பிழை இருக்கலாம்

கருத்துப் பிழை இருக்கலாம் ஆனால் என்

நினைப்பில் பிழையில்லை

நீ நான் அவன் மூவரும் இனி

எஞ்சிய காலமும் நட்பாய் வாழ

எல்லாம் வல்லவனை வேண்டுகிறேன்

**என்றும் உன் நட்பை விரும்பும்**

**உ. சே . தாஹிர் பாஷா**



